Registerd as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 14 [28-06-98] திங்கட்கிழமை ஓசை 130

## ஆங்கில ஆசிரியர் நியமனம் புள்ளி அடிப்படையில் இடம்பெறும்

ஆங்கில ஆசிரியர் நியமனத்திற்கான போட்டிப் பரீட்சையில் நாட்டின் சகல பகுதிகளிலும் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் மாவட்ட மட்டத்தில் தெரிவுகளை நடத்துவது என கல்விச்சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். விண்ணப்பதாரிகளின்விருப்பப்படி விண்ணப்பிக்கும் மாவட்டங்களுக்கு போட்டிப் பரீட்சையின் புள்ளி முன்னுரிமையின்படி ஆங்கில ஆசிரியர் தெரிவு செய்யப்படுவர். ஆங்கிலம் படிப்பிக்க அம்மொழி சம்பந்தப்பட்ட விசேட அறிவு அவசியம் என்பதால் புள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாகவும் நியமனம் வழங்கும்போது ஆசிரிய பற்றாக்குறை வசதிகுறைந்த இடங்களில் உள்ள பாடசாலைகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமை வழங்கப் படும் எனவும் கல்விச்சபை செயலாளர் வீரரத்ன மேலும் தெரிவித்தார்.

# ஷெல்லைப் பரீட்சிக்க முயன்ற இளைஞனின் பரிதாப மரணம்

## மேலும் ஆறு பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கைவிடப்பட்ட ஷெல் ஒன்றை பரீட்சித்துப்பார்க்க முற்பட்ட இளைஞர் ஒருவர் உடல் சிதறிப் பலியானார். இவருடன் இருந்த ஆறுபேர் படுகாயமடைந்தனர்.

மேற்படி சம்பவம் ஆனைக்கோட்டை நவாலி முள்ளி அகதி முகாமில் நேற்று நண்பகல் 11·30 மணியளவில் இடம்பெற்றது.

இச்சம்பவம் நடந்த விதம் குறித்து முரண்பட்ட தகவல்கள் வெளிவந்துள்ளன. மேற்படி இளைஞர் ஷெல்லைக் குற்றிப் பரீட்சித்த போது ஷெல் வெடித்ததாக ஒரு தகவல் தெரிவிக்கிறது. வேறொரு செய்தியின்படி மேற்படி இளைஞர் சைக்கிள் டைனமோ ஒன்றின் மூலம் ஷெல்லைப் பரீட்சித்துப் பார்த்ததாகவும் அப்பொழுது ஷெல் வெடித்ததாகவும் தெரியவருகிறது,

இச் சம்பவத்தில் மேற்படி அகதிமுகாமில் வசித்துவந்த சிவபாதசுந்தரம் சியோல் [வயது 18] சில்லாலைமேற்கு பண்டத்தரிப்பு] என்பவரே பலியானவராவார். மேலும் அதேயிடத்தைச் சேர்ந்த மாரிமுத்து உதயகுமார்(வயது27), பவளராஜா ரேணுகா (வயது 3], வி,ராஜேஸ்வரி[வயது27]. ப. சிவனேசு [வயது 30], சி. நந்தினி [வயது 13] என்போர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மாரிமுத்து உதயகுமாரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

மேற்படி சம்பவம் நடை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## உடுகம்பொல தப்பிச் செல்ல அமைச்சர் உதவினார்

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்உடுகம்பொல தாம் கொழும்பிலிருந்து சென்னைக்கு இரகசியமாகதப்பிச்செல்ல ஜனாதிபதி பிரேமதாசாவின் அமைச்சரவையில் உள்ள ஒரு அமைச்சரே உதவியதாக கூறியுள்ளார். தம்மைக் கைது செய்ய பிரேமதாசா இரகசியமாக உத்தரவு பிறப்பித்ததை அந்த அமைச்சர் இரகசியமாக தெரியப்படுத்திய தினாலேயே தாம் தோணி ஏறி சென்னைக்கு தப்பியதாக அவர் கூறினார்.

அந்த அமைச்சர் யார் என்றோ தம்மை சென்னைக்கு அழைத்துச் சென்றது யார் என்றோ, அவர் விபரம் தெரிவிக்கவில்லை. தாம் இந்தியாவில் இருந்த போது விக்டர் பெர்னான்டஸ் என் பெயரை மாற்றிக்கொண்டு கேரளவாசி என கூறிவந்ததாகவும் புது டில்லி சென்றபோது ஜோசப் மத்தியூஸ் எனப்பெயரை மாற்றியதாகவும் உடுகம்பொல மேலும் தெரிவித்தார்.

## ரஞ்சனுக்கு நஞ்சுவைக்க முயற்சித்தவருக்கு சிறை

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் [...]

இச் சிப்பாய் அரச இரகசியங்களை ஜே. வி. பிக்கு வழங்கினார் என்றும் கொழும்பில் [...]

## பதவியிலிருந்து ஓய்வுபெற அரச அதிபர் முயற்சி

(கொழும்பு)

யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் எதிர் வரும் செப்டெம்பர் மாதம் முதல் தமது சேவையில்இருந்து ஓய்வு பெற விரும்பி எடுத்த முயற்சியை சிறிலங்கா ஜனாதிபதி டி.பி விஜயதுங்க ஏற்கமறுத்து தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் சேவையில் இருந்து ஓய்வு பெறவிரும்பி அதற்கான கடிதத்தை பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலிசாரின் விடுதலை குறித்து சிறிலங்கா ஜனாதிபதி டி.பி விஜயதுங்கவுடன் நடைபெற்ற பேச்சின் போது திரு. மாணிக்கவாசகர் சமுகமளித்திருந்தார். அப்பொழுதே அங்கு வைத்து ஜனாதிபதி அவரிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (பா)

### கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

கம்உதாவ மேடையில்

## ஜனாதிபதி, பிரதமருக்கு குண்டு துளைக்காத அறை

(கொழும்பு)

மிகிந்தலையில நடைபெற்ற 15-வது கம் உதாவ விழாவில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் பிரதான மண்டபத்தில் கண்ணாடியால் அமைக்கப்பட்ட குண்டு துளைக்காத பாதுகாப்பு அறையில் இருந்து பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்.

அவர்கள் இருவரும் உரை நிகழ்த்துகையில், சாதாரண உடை அணிந்த பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களுக்கு இரு பக்கத்திலும் நின்று பாதுகாப்பு வழங்கினர். கம் உதாவ விழாவைப் பார்வையிட மைதானத்துக்கு பிரவேசித்த பொதுமக்கள் பாதுகாப்பு அதிகாரிகள், மற்றும் விசேட அதிரடிப் படையினாலும் சோதனையிடப்பட்டனர்.

வீடமைப்பு கட்டட நிர்மாணதுறை அமைச்சர் சிறிசேன கூறே, முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் சேவைகளைப் பாராட்டிப் பேசும் போது பல முறை விம்மி அழுதார்.

காலஞ்சென்ற ஜனாதிபதியைக் கௌரவிக்கும் வகையில் ஒரு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. 16-வது கம் உதாவ விழா அடுத்த வருடம் கம்பஹாவில் இடம்பெறும் என்று ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா அறிவித்தார்.

# தேவைப்பட்டியலுடன் வீரசேகரா பயணம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை யாழ். மாவட்டத்திற்குதேவையான அத்தியாவசிய பொருள்கள் தொடர்பாக திரட்டப்பட்ட விபர அறிக்கை பிரிகேடியர் வீரசேகராவிடம் கையளிக்கப்பட்டது. இதை வீரசேகரா கொழும்பில் அரசிடம் கையளிப்பார்.

நேற்று பிரிகேடியர் வீரசேகராவிடம் வடபகுதிக்குத் தேவையான விபரங்கள் அடங்கிய தடை நீங்கிய பொருள்களின் பட்டியல் கையளிக்கப் பட்டதைத் தொடர்ந்து அவர் கொழும்புபயணமானார். இவருடன் யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகரும் கொழும்பு சென்றுள்ளார்.

பிற்பகல் 4-20 மணியளவில் விடுதலைப் புலிகளின் விசேட பாதுகாப்பில் வந்த இவர் உடனேயே தரித்து நின்ற 'குமண' கப்பலில் பயணமானார். விடுதலைப் புலிகள் பிரமுகர்களும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப்பிரதிநிதியும் இவரை வழியனுப்பி வைத்தனர்.

இதே சமயம் நேற்று முன்தினம் மாலை விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை விபரங்களையும் அவர் சிறிலங்கா அரசிடம் விளக்கவுள்ளார். (யோ)

## எரிபொருள் தடை நீக்கம் வர்த்தமானி அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள், எண்ணெய் வகைகள், உரவகை ஆகிய பொருள்கள் வடபகுதி செல்ல தடைநீக்கம் செய்யப்பட்ட அறிவித்தல் அடங்கிய அரச வர்த்தமானி கடந்த வெள்ளியன்று வெளியானது. இந்த வர்த்தமானி நேற்று முன்தினம் பிரிகேடியர் வீரசேகராவினால் விடுதலைப் புலிகளிடம் வழங்கப்பட்டது,

இந்த வர்த்தமானி அறிவிப்பு வெள்ளியன்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஏயர்வைஸ் மார்ஷல் வோல்டர் பெர்னான்டோவினால் விடுக்கப்பட்டது.

### கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில்உள்ள [...]

ஷெல் வெடித்ததாக ஒரு தக

தாகவும் அப்பொழுது ஷெல்

## உடுகம்பொல தப்பிச் செல்ல அமைச்சர் உதவினார்

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர்உடுகம்பொல தாம் கொழும்பிலிருந்து சென்னைக்கு இரகசியமாகதப்பிச்செல்ல ஜனாதிபதி பிரேமதாசாவின் அமைச்சரவையில் உள்ள ஒரு அமைச்சரே உதவியதாக கூறியுள்ளார். தம்மைக் கைது செய்ய பிரேமதாசா இரகசியமாக உத்தரவு பிறப்பித்ததை அந்த அமைச்சர் இரகசியமாக தெரியப்படுத்தியதினாலேயே தாம் தோணி ஏறி சென்னைக்கு தப்பியதாக அவர் கூறினார்.

அந்த அமைச்சர் யாரென்றோ தம்மை சென்னைக்கு அழைத்துச் சென்றது யாரென்றோ, அவர் விபரம் தெரிவிக்கவில்லை. தாம் இந்தியாவில் இருந்த போது விக்டர் பெர்னான்டஸ் என் பெயரை மாற்றிக்கொண்டு கேரளவாசி என கூறி வந்ததாகவும் புதுடில்லி சென்றபோது ஜோசப் மத்தியூஸ் எனப்பெயரை மாற்றியதாகவும் உடுகம்பொல மேலும் தெரிவித்தார்.

## ரஞ்சனுக்கு நஞ்சுவைக்க முயற்சித்தவருக்கு சிறை

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவை விஷமிட்டு கொல்ல முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு இராணுவ நீதிமன்றம் 15 வருட சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

1989இல் ஜே. வி. பி ஆதரவாளரான டி சில்வா எனும் இச் சிப்பாய் அரச இரகசியங்களை ஜே. வி. பிக்கு வழங்கினார் என்றும் கொழும்பில் நடைபெற்ற ஒரு விருந்தில் ரஞ்சன் விஜேரட்னவிற்கு உணவில் விஷம் வைக்க முயன்றார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டார். வழக்கு விசாரணையில் குற்றம் நிரூபிக்கப்பட்டு அவர் 15 வருட சிறைத் தண்டனை பெற்றுள்ளார்

## துப்பாக்கிச் சூட்டிற்கு இளம் பெண் பலி

வீடுபார்க்கச்சென்ற இளம் பெண் ஒருவர் விளான் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

விளான் பகுதியைச்சேர்ந்த- தற்போது ஆனைக்கோட்டை, ''யாவர்'' முகாமில் வசித்து வந்த சு. கலிஸ்ரா (20வயது) என்கின்ற இளம் பெண்ணே மரணமடைந்தவராவார்.

இச் சம்பவம்பற்றி தெரிய வருவதாவது; நேற்று 11-30 மணியளவில் மேற்படி பெண் மேலும் மூன்று பெண்களுடன் தமது வீட்டைப் பார்க்கச் சென்ற சமயமே மேற்படி சம்பவம் நடைபெற்றுள்ளது,

இதைத் தொடர்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும்போது வழியில் அவர் மரணமானார். (பா)(நி)

## பதுங்கியிருந்து தாக்குதல்; போராளி ஒருவர் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரை தட்டுமுனையில் கடந்த 25ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப்புலிகள் போராளி வீரவேங்கை மோகன் / கலைமகன் (தர்மலிங்கம் யோகன், சந்தை வீதி மொறக்கொட்டாஞ்சேனை வீரச்சாவு அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இதேவேளை அவ் இடத்தைச்சேர்ந்த இருவரை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக்கொன்றதுடன் 20 பேரைக் கைதுசெய்து முகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர்.

கடற்றொழிலாளியான சபாபதி யாகேந்திரன் (வயது 20 ஒரு பிள்ளையின் தந்தை), தொண்டராசிரியரான கதிர்காமத்தம்பி குருகுலசிங்கம் (வயது 22) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்ட பொதுமக்கள் ஆவர்.



வீரவேங்கை மோகன்
(கலைமகன்)

[வயது 18] சில்லாலைமேற்கு பண்டத்தரிப்பு] என்பவரே பலியானவராவார். மேலும் அதேயிடத்தைச் சேர்ந்த மாரிமுத்து உதயகுமார்(வயது27), பவளராஜா ரேணுகா (வயது ... யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மாரிமுத்து உதயகுமாரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

மேற்படி சம்பவம் நடை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பதவியிலிருந்து ஓய்வுபெற அரச அதிபர் முயற்சி

(கொழும்பு)

யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் தமது சேவையில்இருந்து ஓய்வு பெற விரும்பி எடுத்த முயற்சியை சிறிலங்கா ஜனாதிபதி டி.பி விஜயதுங்க ஏற்கமறுத்து தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் சேவையில் இருந்து ஓய்வு பெறவிரும்பி அதற்கான கடிதத்தை பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலிசாரின் விடுதலை குறித்து சிறிலங்கா ஜனாதிபதி டி.பி விஜயதுங்கவுடன் நடைபெற்ற பேச்சின் போது திரு. மாணிக்கவாசகர் சமுகமளித்திருந்தார். அப்பொழுதே அங்கு வைத்து ஜனாதிபதி அவரிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (பா)

## வீரசேகரா

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை யாழ். மாவட்டத்திற்குதேவையான அத்தியாவசிய பொருள்கள் தொடர்பாக திரட்டப்பட்ட விபர அறிக்கை பிரிகேடியர் வீரசேகராவிடம் கையளிக்கப்பட்டது.இதை வீரசேகரா கொழும்பில் அரசிடம் கையளிப்பார்.

நேற்று பிரிகேடியர் வீரசேகராவிடம் வடபகுதிக்குத் தேவையான விபரங்கள் அடங்கிய தடை நீங்கிய பொருள்களின் பட்டியல் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் கொழும்புபயணமானார். இவருடன் யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகரும் கொழும்பு சென்றுள்ளார்.

பிற்பகல் 4-20 மணியளவில் விடுதலைப் புலிகளின் விசேட பாதுகாப்பில் வந்த இவர் உடனேயே தரித்து நின்ற 'குமண' கப்பலில் பயணமானார். விடுதலைப் புலிகள் பிரமுகர்களும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப்பிரதிநிதியும் இவரை வழியனுப்பி வைத்தனர்.

இதே சமயம் நேற்று முன்தினம் மாலை விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை விபரங்களையும் அவர் சிறிலங்கா அரசிடம் விளக்கவுள்ளார். (யோ)

## எரிபொருள் தடை நீக்கம் வர்த்தமானி அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள், எண்ணெய் வகைகள், உரவகை ஆகிய பொருள்கள் வடபகுதி செல்ல தடைநீக்கம் செய்யப்பட்ட அறிவித்தல் அடங்கிய அரச வர்த்தமானி கடந்த வெள்ளியன்று வெளியானது. இந்த வர்த்தமானி நேற்று முன்தினம் பிரிகேடியர் வீரசேகராவினால் விடுதலைப் புலிகளிடம் வழங்கப்பட்டது,

இந்தவர்த்தமானி அறிவிப்பு வெள்ளியன்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஏயர்வைஸ் மார்ஷல் வோல்டர்.பெர்னான்டோவினால் விடுக்கப்பட்டது.

### கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில்உள்ள சகல உத்தரவு பெற்ற எரிபொருள் முகவர்கள் அனைவரையும் இன்று காலை 9 மணிக்கு கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் நடக்க இருக்கும் கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### கொடுப்பனவுகள் வழங்கல்

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு விடைத்தாள் மதிப்பீட்டுக்கான கொடுப்பனவுகள் 30ஆம்திகதி புதன்கிழமை மதிப்பீடு செய்த கல்விக்கோட்டத்தில் வழங்கப்படவிருப்பத

(3ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக் தலைநகர் பாக்தாத் மீது அமெரிக்க ஏவுகணைகள் தாக்கு!

## எட்டு பொதுமக்கள் பலி

(பாக்தாத்)

அமெரிக்காவின் யுத்தக் கப்பல்களில் இருந்து ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தின் மீது நேற்று அதிகாலை ஏவுகணைத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. செங்கடலில் உள்ள யுத்தக்கப்பல்களில் இருந்தும், பாரசீக வளைகுடாவில் தரித்துள்ள விமானம்தாங்கிக்கப்பல்களில் இருந்தும் நடத்தப்பட்ட இத்தாக்குதலின்போது 23 ஏவுகணைகள் பாக்தாத் மீது வீழ்ந்து வெடித்ததாகவும், அதில் 8 பேர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி திரு ஜோர்ஜ்புஷ் கடந்த ஏப்ரல் மாதத்தில் குவைத் சென்றிருந்தபோது அவரைக் கொல்ல ஈராக் சதி செய்தமைக்கு பழி வாங்கும் நடவடிக்கையாகவே இத் தாக்குதலை நடத்தியதாக வாஷிங்டன் அறிவித்துள்ளது

இதேவேளை அமெரிக்க யுத்தக் கப்பல்கள் ஈராக்கின் தகவல் தொடர்பு மையம் மற்றும் கட்டுப்பாட்டு அமைப்புமீதும் மக்கள் குடியிருப்புகள்மீதும் 23 ஏவுகணைகளை ஏவியதாகவும் இதனால் இவை பலத்த சேதங்களுக்குள்ளாகியதுடன் 8 பொதுமக்கள் பலியாகினர். மேலும் பத்துப் பேர் காயமடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

புஷ் கொலை சதி என்பது குவைத்தினால் வேண்டுமென்றே சோடிக்கப்பட்ட கதை என ஈராக் தெரிவித்துள்ளது.

ஈராக்கின் இக்கூற்றை ஏற்க மறுத்துள்ள ஜனாதிபதி பில்கிளின்டன் புஷ்ஷிற்கு எதிரான சதி, அமெரிக்க மக்களுக்கு எதிரான சதி எனக் கூறியுள்ளார். இதேவேளை பிரிட்டன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் பாக்தாத்மீதான தாக்குதல் நியாயமானதென தெரிவித்துள்ளன. ஆனால் ஈராக் இத்தாக்குதல் நியாயமற்ற ஓர் ஆக்கிரமிப்பு என கூறியுள்ளது.

இத்தாக்குதல் தொடர்பாக அதிபர் பில்கிளிண்டன் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் கூட்டத்தை உடன் கூட்டவேண்டுமெனவும் அதில் இத்தாக்குதலுக்கான காரணம் குறித்து விளக்கப்படும் எனவும் அமெரிக்கா ஐ. நா. சபைக்கு தெரிவித்துள்ளது.

## ஈராக் மீதான தாக்குதல் நேச நாடுகள் ஆதரவு

பக்தாத்தில் இருக்கும் ஈராக்கிய அரசின் புலனாய்வுத்துறை தலைமையகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும், இத் தலைமையக கட்டடத்தின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்பாக அமெரிக்காவின் நேசநாடுகளுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது எனவும அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் மீது கொலை முயற்சி. மேற்கொள்ளப்பட்டதை சுட்டிக் காட்டி அமெரிக்காமீதான தாக்குதலுக்கு பதிலடி கிடைக்காமற் போகாது எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் மக்களைப் பாதுகாக்கவும், அமெரிக்காவின் ஆட்சி உரிமையை பராமரிக்கவும் தமது நாடு பயங்கவாதத்தை எதிர்த்து போராடும் என்றும் தெரிவித்தார்.

# பெற்றோல், டீசலுக்கு இராணுவம் அனுமதி மறுப்பு

(வவுனியா)

சிறிலங்கா அரசால் அண்மையில் தடை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பொருள்களான பெற்றோல், டீசல் ஆகியவற்றை வடபகுதிக்குள் எடுத்து வந்த பொதுமக்களை இராணுவத்தினர் தாக்கியதுடன் அப்பொருள்களையும் பறிமுதல் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 3 வருடங்களாக அத்தியாவசியப் பொருள்கள் உட்படபல பொருள்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்ல சிறிலங்கா அரசு தடை விதித்திருந்ததும் தற்போது யுத்தக் கைதிகள் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும்

(3ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிச் சூழ்நிலையே ராணுவ செலவை குறைக்கும் – ரணில்

(கொழும்பு)

இலங்கையில் இராணுவ செலவினங்கள் குறைய வேண்டுமானால் வடக்கு கிழக்கில் அமைதியான சூழல் ஏற்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் வாரப் பத்திரிகை ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேற்கண்ட கருத்து பாரிஸ் உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் வற்புறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார். பல நாடுகள் உதவி கோரியிருந்தமையால் இலங்கைக்கு எவ்வளவு உதவி கிடைக்கும் என்று

(3ஆம் பக்கம் பார்க்க)

## பலவத்தை முகாமிலிருந்து கைதிகள் மர்ம மறைவு

(கொழும்பு)

பலவத்தை தடுப்பு முகாமில் இருந்து வெளியே கொண்டு செல்லப்பட்டகைதிகள்இன்னும்முகாம் திரும்பவில்லை என பி. பி. ஸி. அறிவித்துள்ளது.

இந்த தடுப்பு முகாமில் உள்ளவர்களை எக்காரணம் கொண்டும் இடமாற்றப்படமாட்டாது என ஜயலத் கமிஷன் உறுதி அளித்தபோதும் இவர்களை முகாமின் உள்ளே இருந்து கொண்டு சென்றனர். இவர்கள் உயிருடன் இருக்கிறார்களோ தெரியாது என சக கைதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

(3ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### அராலியூரரின் நாடகங்கள்

லட்சக்கணக்கானவர்கள் கேட்டு மகிழ்ந்துகொண்டிருக்கின்ற. அராலியூர் சுந்தரம் பிள்ளையின் வானொலி நாடகங்களை நீங்கள் வாசித்தும், படித்தும், நடித்தும் மகிழலாம். (1) கெட்டிக்காரரர்கள், (2) முதலாம்பிள்ளை 30/- நகைச்சுவை நிறைந்த 19 நாடகங்கள். (4092)

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்

நல்ல நிலையில உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைன்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் (சி-6733)

### ஹோட்டல் ஞானம்ஸ்

புதிய மெருகுடன் உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் தங்குவதற்கும், தரமான சுவையான உணவுபார்சல்கள், (முன் கூட்டியே ஓடருக்கும்) மற்றும் குளிர்பானம், மதுபானம் அருந்துவதற்கும் திருமண வைபவங்கள், விருந்துபசாரங்கள் எதுவானாலும் உங்களை வரவேற்கின்றது- ஹோட்டல் ஞானம்ஸ் (சி/6877)

### திருத்திக் கொடுக்கப்படும்

தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரம் பரதி பண்ணும் இயந்திரம் சிறந்த தொழில் நுட்ப வல்லுநர்களால் குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும் றொசவூட G R மருதலிங்கம் 8/1, E அம்மன் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (5210)

### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஆலங்கட்டை றோட் கொளளாவத்தை பொலிகண்டி கற்கண்டுமாமா சைக்கிள்கடை, பொலிகண்டி. (5220)

### உணவுப் பார்சல்கள்

ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின் உணவுப்பார்சல்கள் முற்பகல் 11 30 மணி முதல் 3.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை சுண்டுக்குளி. செந்தாமரை 7 குமாரசாமி வீதி, பல்கலைக்...

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். செழியன் (சீனு)

இலட்சுமிகாந்தன் ஜெயகாந்தன் (குமணன்)

[வாடியடி இயக்கச்சி இராணுவத்துடனான நேரடிமோதலில் வீரச்சாவடைந்தார்]

வீரத்தாயின் மடியில் 05.08 1975

தமிழ்த்தாயின் மடியில் 09.07 1992

திதி : 28 06 1993

வெற்றிக்கு வழிவகுத்த வல்லவரின் வரிசையிலே
வெற்றி கொள்ளும் காந்தனென வல்வையிலே மலர்ந்-தாய்!

பெற்றோரின் மனம் மகிழ சுகவாழ்வு வாழாமல்
சுற்றமும் சூழமும் ஈழமண்ணே சொந்தமென்றாய்
ஊற்றெடுக்கும் நயவிடிவில் உன்பணியும் தொடர்வதற்கு
விற்றிருக்கும் புலிப்படையில் செழியனாகச் சீறிநின்றாய்
ஆற்றி வந்த அரும்பணிகள் இயக்கச்சியில் நிறைந்தாலும்
போற்றிடுவோம் உன்பணியை தொழுது நிற்போம் நம் விடிவை

மேலும் இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கங்கள்.

இன்று (28-06-93) எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு திதியில் சக போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

காந்தரூபன் வீதி (குச்சம்)
வல்வெட்டித்துறை.

மீண்டும் உன்வரவை எதிர்பார்த்து நிற்கும்,
பெற்றோர், அண்ணாமார்,
அக்காமார், அண்ணி உற்றார்,
உறவினர் நண்பர்கள்

(5203)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## நினைவு கூருகின்றோம் ... 1993-06-28

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை- மூதூர் கூனித்தீவுப் பகுதியில் எமது முகாம் ஒன்றின் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய -

**கப்டன் முத்துச்சாமி** (குமாரசூரியர் முரளிதரன் - களுவாஞ்சிக்குடி - மட்டு)

**லெப். சுதர்சன்** (பூபாலப்பிள்ளை சிவகுருநாதன் - ஆரையம்பதி 01 - மட்டு)

**2 ம் லெப். கோபி** (நாகமணி ஆனந்தராசா - ஆரையம்பதி 01 - மட்டு)

**மேஜர் கஜேந்திரன்** (சிங்காரவேல் சசிகரன் - 14 வித்தியாலய வீதி - திருமலை)

**கப்டன் சிறி'குளியா** (அப்புசாமி அன்பரசு - அரசடி - திருமலை)

**லெப். சுரேஸ்** (தங்கராசா இளங்கோ - ஆலங்கேணி, கிண்ணியா - திருமலை)

**லொயிட்** (இருதயநாதன் வின்சன் ஜெகநாதன் - கோயில் வீதி, மூதூர் - 03)

**நிமால்** (செல்லையா நற்குணராசா — கட்டைபறிச்சான் - திருமலை)

**தாகூர்** (திருஞானசம்பந்தன் கஜேந்திரராசா - ஏ.ஜி.ஏ ஒழுங்கை - வல்வெட்டித்துறை)

இதே மூற்றுகையின் போது சிறிலங்கா இராணுவத்தினரால் அடித்துக் கொல்லப்பட்ட 09 தமிழர்கள்.

திருமலை - கூனித்தீவுப் பகுதியை மூற்றுகையிட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் சுடடுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான;

**கந்தையா ஏகாம்பரம்** (கூனித்தீவு - திருமலை)

1988ஆம் ஆண்டு மட்டு - 40 கிராமம் பகுதியில் தேசவிரோதசக்திகளால் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த -

**குரு** (சித்திரவேல் சத்தியநாதன் - பக்கியெல்ல, 37ஆம் கிராமம் - மட்டு)

1989ஆம் ஆண்டு மிருசுவில் பழையவாய்க்கால் பகுதியில் தேசவிரோதசக்திகள் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் குட்டி/அக்பர்** (அருளம்பலம் குகபாலன் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

மயிலிட்டிப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சித்திரவதை செய்யப்பட்டு வெட்டிக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான;

**செல்வம் அக்கா** (திருமதி செல்வம் செந்திவேல் - வீரமாணிக்கதேவன்துறை - மயிலிட்டி)

பருத்தித்துறை - புலோலி, கந்தமுருகேசனார் சிலை அருகில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண், மற்றும் கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயவீதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கோப்பாய் உதவி அரசாங்க அதிபர், ஆலய அர்ச்சகர் உட்பட 03 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**உமாகாந்** (கனகலிங்கம் நவரட்ணராஜா - டச்சுவீதி, சாவகச்சேரி - யாழ்)

யாழ் - பலாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**தம்பி** (சிவசாமி சிவப்பிரகாசசுந்தரம் - தம்பி- பிள்ளையார் கோவிலடி, மயிலிட்டி - யாழ்)

யாழ் - பலாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**குமரன்** (சுப்பையா கனகராஜ் - உடங்கல், நெடுங்கேணி- மணலாறு)

வவுனியா — தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**நித்திலன்** (சண்முகம் தேவகுமார் — முத்துமாளிகை, புளியங்குளம் - வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**இன்பன்** (கனகு செல்வராசா - 1-ம் ...

## 390 குடும்பங்களுக்கு செஞ்சிலுவை உதவி

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஏழு முகாம்களில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து தங்கிவரும் 390 குடும்பங்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் துணி வகைகளையும், சமையல் பாத்திரங்களையும்வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

பெறுமதிமிக்க இப்பொருள்களை இலங்கைச்செஞ்சிலுவை சங்கம் வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வழங்கும்.

வியாபாரிமூலை, சுற்கோட்டை, பொலிகண்டி, திக்கம், முனை, வட-இந்து, சந்நிதியான் ஆச்சிரமம் ஆகிய முகாமகளில் உள்ளவர்களுக்கே இப்பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (யோ)

## பொஸ்பேற் விற்பனைக்கு

எங்களிடம் சுப்பர் பொஸ்பேற் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
வடமராட்சி கொத்தணி-
திக்கம் வடிசாலை,
அல்வாய்.

(3436)

## ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 01 — 11 — 1972



தாயக மண்ணில்: 28 — 06 — 1992

### கப்டன் எல்லாளன்-ஒட்டேகா

(பொன்னுச்சாமி ஹரிதரன்)

உன் நினைவுகள் வந்திடும் வேளையில்
எம் விழிகளில் கண்ணீர் பெருகிடும்
எம்இதயங்கள் நீ செய்தகுறும்புகளைத்தான்மறந்திடுமோ
என்னதான் சொல்லிடினும் எங்கள் மனம் ஆறுதில்லையே!

''சிவகுருவாசம்''
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.
(5205)

உனை இழந்து தவிக்கும்
ஐயா, அம்மா, அக்கா, தங்கை
அம்மாச்சி, அப்பாச்சி,
உற்றார், உறவினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



நுட்ப வல்லுநர்களால் குறைந்த செலவில் உத்தர வாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும் றொசவூட G R மருதலிங்கம் 8/1, E அமமன் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

(5210)

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஆலங்கட்டை றோட் கொளளாவத்தை பொலிகண்டி கற்கண்டுமாமா சைக்கிள்கடை, பொலிகண்டி.

(5220)

## உணவுப் பார்சல்கள்

ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின் உணவுப்பார்சலகள் முற்பகல் 11 30 மணி முதல் 3.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை சுண்டுக்குளி. செந்தாமரை 7 குமாரசாமி வீதி, பல்கலைக் கழக முன்வீதி, கந்தர்மடம் ஆகியஇடங்களிலும்பெற்றுக் கொள்ளலாம். (சி-6898)

## சமூகம் தரவும்

நடந்து முடிந்த தாதிகள் இறதிப் பரீட்சையில் சித்தி எய்திய தாதிய மாணவர்கள் இருபத்தேழு பேர்களையும் எதிர்வரும்முதலாம் திகதிவியாழக்கிழமை யாழ் போதனா வைத்தியசாலையில் கடமைக்குச் சமுகம் அளிக்கும்படி யாழ் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (21)

யாழ்ப்பாணப்பல்கலைக் கழக
புவியியற் கழகத்தினரின்
புவியியலாளன்
சஞ்சிகை
வெளியீட்டு விழா
**1993**

28-06-1993 திங்கட் கிழமை பி. ப. 3 மணிக்கு புவியியற்றுறை விரிவுரை மண்டபம் இல 2 இல் உங்களின் வரவிற்காகக் காத்திருககின்றோம்.

(இ)


நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

காந்தரூபன் வீதி (குச்சம்)
வல்வெட்டித்துறை.

மீண்டும் உன்வரவை
எதிர்பார்த்து நிற்கும்,
பெற்றோர், அண்ணாமார்,
அக்காமார், அண்ணி உற்றார்,
உறவினர் நண்பர்கள்

(5203)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை ஆதவன்
(குகதாஸ் திருமாறன்)

தாயின் மடியில்
1975.06.20

தாயக மண்ணில்
1992.07.09

திதி: 1993 06.28

மண்காக்கப்புறப்பட்ட மைந்தனே - நீ இன்று
விண்காக்கச் சென்றதேனோ.
கண்போன்ற தமிழ் மண்ணின் மாந்தர்தான் படுகின்ற
கொடுந்துயர் கண் தானோ
எம்மை நீ பிரிந்தின்று ஆண்டொன்று சென்றாலும்
எண்ணமோ உன்பின்னே தான்
உம்மைநாம் மறப்பதோ உயிருள்ளவரை இல்லை
உயிர்த்து வா மண்காக்கத்தான்.

28-06-93 இன்று எமது இல்லத்தில்நடைபெறும் 1-ம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்படி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(5231)

அப்பா, அம்மா,
தங்கை, தம்பிமார்.

அருகில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண், மற்றும் கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயவீதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கோப்பாய் உதவி அரசாங்க அதிபர், ஆலய அர்ச்சகர் உட்பட 03 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**உமாகாந்** (கனகலிங்கம் நவரட்ணராஜா - டச்சுவீதி, சாவகச்சேரி - யாழ்)

யாழ் - பலாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**தம்பி** (சிவசாமி சிவப்பிரகாசசுந்தரம் - தம்பி- பிள்ளையார் கோவிலடி, மயிலிட்டி - யாழ்)

யாழ் - பலாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**குமரன்** (சுப்பையா கனகராஜ் - உடங்கல், நெடுங்கேணி- மணலாறு)

வவுனியா – தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**நீத்திலன்** (சண்முகம் தேவகுமார் – முத்துமாளிகை, புளியங்குளம் - வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**இன்பன்** (கனகு செல்வராசா - 1-ம் படிவம், இராஜேந்திரன்குளம் - வவுனியா)

வவுனியா - தாண்டிகுளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**லெப். செந்தில்/மகேசன்** (சரவணன் மதனராசா-இரணை, இலுப்பைக்குளம் - வவுனியா)

அம்பாறை - அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் (மணலாறு கொக்கிளாய்) படகில் செல்லுகையில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 05 தமிழர்கள்.

புன்னாலைக்கட்டுவனில் பாரவண்டி ஒன்றின் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 04 மாதக் குழந்தை.

1991ஆம் ஆண்டு திருமலை - தம்பலகமம் சூரன்கல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது ஏற்பட்ட சமரின் போது வீரச்சாவெய்திய-

**ஹரிகரன்** (வடிவேல் சின்னராசா-முள்ளிப்பொத்தானை, தம்பலகமம் - திருமலை)

**ராஜ்குமார்** (அருணாசலம் சிவராசா – 3-ம்வட்டாரம், ஆலங்கேணி - திருமலை)

**சந்திரசேகரம்** (தெய்வேந்திரம் யோகன் - வெருகல், மூதூர் - திருமலை)

வவுனியா -பேயாடிகூழாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் வதனன்** (கந்தசாமி இராமச்சந்திரன் - 4-ம்படிவம், பாவற்குளம் - வவுனியா)

1992ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட ''பலவேகய - 02', நடவடிக்கையின் போது புல்லாவெளியில் நிகழ்ந்த சமரில் வீரச்சாவெய்திய-

**கலைஞன் நசீர்** (செல்வநாயகம் ரஞ்சன் -புதுக்குடியிருப்பு, மாவடுவேம்பு, வந்தாறுமூலை – மட்டு)

**இளங்கதிர்/சூரியகுமார்** (சின்னராசா பத்மநாதன் ஐயங்கேணி - மட்டு)

**கப்டன் வீரமணி** (கணேசபிள்ளை சந்திரசேகரம் - 30/10 கண்ணகிபுரம், உவர்மலை - திருமலை)

**லெப். வெற்றி** (கனகலிங்கம் அருள்நேசன் - மாசார்-பளை)

**கப்டன் எல்லாளன்/ஒட்டேகா** (பொன்னுச்சாமி ஹரிதரன் -சிவகுருவாசா, அம்மன் கோயிலடி - வல்வெட்டித்துறை)

**2 ம் லெப். எல்லாளன்/அன்சார்** (யேசுதாசன் கனிஸ்ரன் பிலேந்திரன் - உரும்பராய் தெற்கு-யாழ்)

**2-ம் லெப். கபில்** (பாலசிங்கம் முரளிதரன் - டச்சுவீதி, அளவெட்டி வடக்கு - யாழ்)

**வீரமணி தீபன்ராஜ்** (குணரத்தினம் சிறீரஞ்சன் - அரசடி ஒழுங்கை, மட்டுவில், சாவகச்சேரி-யாழ்)



1972 1992

## கப்டன் எல்லாளன்-ஒட்டேகா
(பொன்னுச்சாமி ஹரிதரன்)

உன் நினைவுகள் வந்திடும் வேளையில்
எம் விழிகளில் கண்ணீர் பெருகிடும்
எம்இதயங்கள் நீ செய்தகுறும்புகளைத்தான்மறந்திடுமோ
என்னதான் சொல்லிடினும் எங்கள் மனம் ஆறுதில்லையே!

''சிவகுருவாசம்''
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.
(5205)

உனை இழந்து தவிக்கும்
ஐயா, அம்மா, அக்கா, தங்கை
அம்மாச்சி, அப்பாச்சி,
உற்றார், உறவினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
06-12-1969

வீரச்சாவு
08-07-1992

திதி: 28-06-1993

## லெப். தமிழ்மாறன்
(நெல்லிநாதன் விவேகானந்தன்)

பந்தமொடு பாசம் விடுத்துப்
பட்டப்படிப்பும் துறந்து
வந்த பகை ஈழம் மீது
வதைத்திடப் புலியாயெழுந்து
தந்தனன் தன்னுயிரைத்
தற்கொடையாய்த் தமிழ்மாறன்
சொந்தமென அவன் நாமம்
சொல்லும் தினம் தென்றலிங்கு!

உமது பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
28-06-1993

(5224)

மட்டு - கள்ளியந்தீவில் சிறிலங்கா இராணுவத்தின மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். தங்கேஸ்** (ஏரம்பு தேவகுமார் - குருமண்வெளி களுவாஞ்சிக்குடி - மட்டு)

மட்டு - வாகரைப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

பளை- பச்சிலைப்பள்ளிப் பகுதியில் விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட நீர்வேலியைச் சேர்ந்த விறகு வியாபாரி.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6900)

சிந்தனைக்கு

உண்மைகளைப் புறக்கணித்து விடுவதால், அவை உண்மைகளாய் இல்லாமல் போய் விடுவதில்லை.
— ஆல்டஸ் ஹக்ஸ்லி

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## அம்பலமாகும் உண்மை

ஒரு யதார்த்த நிலையை, உண்மையை எப்பொழுதும் மறைத்துவிட முடியும் எனக் கருதி விடக்கூடாது. இதனையே இன்று 'ஏசியா வோச்' சஞ்சிகை சிறிலங்கா அரசாங்கம் பற்றி எழுதியுள்ளவை வெளிக்காட்டுவதாகவுள்ளது. அதாவது, தன் கட்டுப்பாட்டிலுள்ள தொலைத்தொடர்பு சாதனங்கள், மக்கள் தொடர்பு சாதனங்கள் என்பனவற்றின் மூலம், இனப்பிரச்சினை குறித்து சிறிலங்கா அரசாங்கம் மேற் கொண்டு வந்த பிரசாரங்கள் இன்று பொய்யானவை என உலகம் விளங்கிக் கொள்ள 'ஏசியாவோச்' சஞ்சிகை வழி செய்துள்ளது.

''இனப்பிரச்சினையை அணுகவோ அன்றி தீர்க்கவோ சிறிலங்கா அரசிற்கு எந்தவித ஆர்வமோ அன்றி ஆற்றலோ இல்லை. 1983ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்துவரும் இனப்பிரச்சினையை எடுத்து நோக்கின் இதி ் எந்தவிதமான சந்தேகமும் தோன்றுவதாக இல்லை'' என்பதே 'ஏசியாவோச்' சுட்டிக்காட்டியுள்ள விடயமாகும்.

'ஏசியாவோச்' சஞ்சிகையின் இக் கணிப்பீடானது, தமிழ் மக்களுக்கு ஆச்சரியம் அளிக்கும் ஒன்றல்ல. வெளிநாட்டுச்சஞ்சிகை ஒன்று எழுதியுள்ளமையே இதில் உள்ள முக் யம். இது உலக மக்களும் சிறிலங்கா அரசாங்கத்தின் கபடநாடகத்தைப் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாகும்.

1983ஆம் ஆண்டு இனப்பிரச்சினை தொடர்பாக ஆயுதப்போராட்டம் வெடித்துக் கிளம்பிய அன்றிலிருந்து. இன்று வரை இனப்பிரச்சினையின் தீர்வு குறித்து அரசாங்கம் அணுகிய முறையாவும் நேர்மையற்றவையாகும். பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வகையிலும் இருக்கவில்லை. இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே இறுதித்தீர்வு எனத் திடமாக எண்ணும் சிறிலங்கா அரசாங்கம் அரசியல் தீர்வு குறித்து ஒரு சரியான அணுகுமுறையைக் கையாளவில்லை.

வட்டமேசை மாநாடு, சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத்தெரிவுக்குழு எனக் காலம் கடத்தும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டிருந்ததே ஒழிய பிரச்சினைத் தீர்விற்கு உருப்படியான தீர்வு எதையும் முன்வைக்கவில்லை. இம் மாநாடுகளிலும்...

# நாஞ்சிலாரை நீக்கியமை கட்சி எடுத்த அவசர முடிவு

## கோபால்சாமி கண்டனம்

(சென்னை)

தி.மு கவினர் கட்சி ஊழியர்களையே எதிரிகள் போல நினைத்து செயற்படக்கூடாது என்று ராஜ்யசபா உறுப்பினரான வை. கோபால்சாமி தெரிவித்தார்.

தி.மு.கவின் முன்னாள் துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் நிதி அமைச்சருமான நாஞ்சில் மனோகரன் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டதைக் கண்டித்து மதுரையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், இந்த விவகாரம் தொடர்பாக வீரபாண்டி ஆறுமுகம், பொன். முத்துராமலிங்கம் போன்றோரின் நிலையைத் தான் ஆதரிப்பதாகவும், நாஞ்சில் மனோகரனை வெளியேற்றுவது என்று கட்சித் தலைமை எடுத்த அவசரமுடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதே வேளை தி.மு.க. விலிருந்து சில தினங்களின் முன் நீக்கப்பட்ட நாஞ்சில் மனோகரன் தம்மை மீண்டும் சாதாரண உறுப்பினராக சேர்த்துக்கொள்ளுமாறு கோரியுள்ளார். கருணாநிதியை இழிவுபடுத்தும் நோக்கில் தாம் கவிதை எழுதவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அவதூறு பரப்பும் சக்திகளை எதிர்த்துப் போராடுவோம்

போபாலில் ராவ் தெரிவிப்பு

(டில்லி)

அவதூறு பரப்பும் சக்திகளை எதிர்த்துப் போராடுவதில் தாமும், காங்கிரஸ் கட்சியும் உறுதியோடு இருப்பதாக இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் போபாலில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் இத்தகைய சுயநல சக்திகள் கடந்த காலத்திலும் இவ்வாறு அவதூறுகளைப் பரப்புவதற்கு முயற்சித்துள்ளன என்றும், கட்சி அத்தகைய சக்திகளை எதிர்த்து உறுதியோடு போராடியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தம்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு பற்றிக் குறிப்பிட்ட பிரதமர் இத்தகைய குற்றச்சாட்டுகளால் நாட்டுக்கும், மக்களுக்கும் பணியாற்ற கொண்டுள்ள உறுதியிலிருந்து தாம் பின்வாங்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

## பிரபாகரனை கைது செய்ய உடன் நடவடிக்கை தேவை

- ராஜீவ் படையணி வற்புறுத்து

(டில்லி)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரனை உடனடியாக கைது செய்யக்கோரி முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆதரவாளர்கள் புதுடில்லியில் உள்ள சிறிலங்கா தூதரகத்திற்கு வெளியே கடந்த செவ்வாய்க்கிழமை அன்று ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளனர்.

''ராஜீவ்காந்தி படையணி', (ராஜீவ்காந்தி பிரிகேட்) என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களே இவ் ஆர்ப்பாட்டத்தை நடாத்தியதாக பி.ரி ஐ. செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

புதுடில்லிக்கு சென்றிருந்த சிறிலங்கா பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவிடம் வழங்கிய மகஜர் ஒன்றில் இந்த படையினர் பிரபாகரனை கைது செய்யும் விவகாரத்தில் சிறிலங்கா அரசு காட்டும் தாமதம் தொடர்பாக கவலை யடைவதாக தெரிவித்துள்ளனர்.

இன்னும் ஒரு மாத காலத்திற்குள் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனையும், பொட்டு அம்மானையும் கைது செய்து இந்திய இராணுவத்திடம் கையளிக்காவிட்டால் நேரடி நடவடிக்கை மேற்கொள்ளும் பாதையை தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் தங்களுக்கு ஏற்படுமென்றும் அத்தகைய சூழ்நிலை ஏற்படும் இடத்து சிறிலங்கா அரசே பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்றும் சிறிலங்கா பிரதமரை அந்த மகஜரில் ராஜீவ் காந்தி படையணியினர் எச்சரித்திருப்பதாகவும் பி.ரி. ஐ செய்தி கூறுகிறது.

## அமெரிக்க ஒலிபரப்பு நிலைய தொடக்கவேலை ஆரம்பம்

அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்தின் அமைப்பிற்கான ஆரம்ப கட்டப் பணிகள் சிலாபம் அருகே இரணவிலவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இந்நிலையத்தின் பணிப்பாளர் கூறியுள்ளார்,

கொழும்பிலிருந்து இடமாற்றம் பெற்று கொரியாவின் சியோல் நகருக்கு கடமைப் பொறுப்பை ஏற்கச் செல்லும் இந்நிலையப் பணிப்பாளர் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அமெரிக்க ஒலிபரப்பு நிலையம் அமைக்கப்படுவதற்கான ஆரம்ப வேலைக்கான தண்ணீர் விநியோகம், மின் விநியோகம், வீதி அமைப்பு போன்ற முக்கிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும், எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு இடையில் இந் நிலையம் செயற்பட ஆரம்பிக்கும் என்று எதிர்ப்பார்ப்பதாகவும் தெரிவித்தார். எனினும் இந்நிலையத்திலிருந்து ஒலிபரப்புகள் ஆரம்பிக்கப்படுவதற்கு 1995 இன் இறுதிப் பகுதிவரை செல்லும் எனவும் குறிப்பிட்டார்.

1985 ஜனவரியில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவருக்கும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தலைவருக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டின் பிரகாரம் இந்நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்ட போதும் பல்வேறு அரசியல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக சமீபகாலம் வரை இந்நிலைய அமைப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சிறப்பு இசைக்கச்சேரி

உரும்பராய் கற்பக விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் 11ஆம் திருவிழாவான நாளை செவ்வாயன்று பிற்பகல் 6.00 மணியளவில் சங்கீத பூஷணம் பத்மலிங்கத்தின் சிறப்பு இசைக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் இசை ஞானதிலகம் இராதா கிருஷ்ணன் (வயலின்) சங்கீதரத்னம் சிதம்பரநாதன் (மிருதங்கம்) வித்வான் ராஜா (முகர்சிங்) ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மீண்டனர்

(வவுனியா)

நொச்சிமோட்டைப் பகுதியில் கடந்த 31ஆம் திகதியன்று இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்பட்ட இருவர் காயங்கள் எதுவும் இன்றி மீண்டும் வந்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. ஓமந்தை நாவற்குளத்தைச் சேர்ந்த வள்ளி என்னும் நடுத்தர வயதுடைய குடும்பப் பெண்மணி ஒருவரும், மாங்குளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் உதயகுமார் [21வயது) என்பவருமே இவ்வாறு மீண்டு வந்தவர்கள் ஆவர்.

# உடுகம்பொலவின் புகார்கள் விசாரணைக்கமிசன் தேவை

## எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல அரசுக்கு எதிராகச் சாட்டிய குற்றங்கள் சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளும்படி கேட்பது குறித்து ஆலோசிக்க எதிர்க்கட்சிகள் விரைவில் கூடவுள்ளன.

உடுகம்பொல தெரிவித்த குற்றங்கள் பற்றி விசாரிக்க ஒரு ஆணைக் குழுவை நியமிக்கும்படி கோரவுள்ளதாக எதிர்க்கட்சிகள் தரப்பில் கூறப்படுகிறது.

உடுகம்பொல கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட பிறகு, காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராகப் பல குற்றங்களைச் சுமத்தியது தெரிந்ததே.

அப்போது எதிர்க்கட்சிகள் சுயேட்சையான ஓர் ஆணைக் குழுவை நியமிக்கும்படி கோரியிருந்தன. உடுகம்பொல தலைமறைவாகியதும் இந்தக் கோரிக்கை கைவிடப்பட்டது.

உடுகம்பொலவைக் கைது செய்யும்படி குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குப் பணிக்கப்பட்டது. இந்தப் பணிப்புரையை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நிறைவேற்ற முடியவில்லை. தலைமறைவு வாழ்க்கை நடத்திவந்த உடுகம்பொல கொழும்பில் 'இரகசி இல்லம்' ஒன்றில் இருந்தபடி பத்திரிகைகளுக்குப் பேட்டிகளும், செய்தி அறிக்கைகளும் கொடுத்திருந்தார்.

இந்தியாவிலிருந்து உடுகம்பொல நாடு திரும்பியதும் எதிர்க்கட்சிகளின் ஆணைக்குழு பற்றிய கோரிக்கை வலுவடைந்துள்ளது.

சிலதினங்களுக்கு முன் நாடு திரும்பிய உடுகம்பொல...

கொழும்பு தனியார் மருத்துவமனையில்

## சிகிச்சை பெற்று வந்தவர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(கொழும்பு)

... பாக்கி நபர்கள் அவரை துரத் ...

## புலனாய்வுதிணைக்களத்தில் பத்திரங்கள் திருட முயற்சி

(கொழும்பு)

பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் இருந்து குற்ற விசாரணைப் பதிவுப் புத்தகங்களையும் மற்றும் போட்டோ பிரதித் தாள்களையும் களவாடிச்செல்ல முயற்சித்த சிற்றூழியர் ஒருவர் கையும்மெய்யு... வுத்தாள்களை புறக்கோட்டை பொலிசில் பணியாற்றும் சார்ஜன்ட் ஒருவர் களவாடித்தருமாறு கேட்டதையடுத்தே தான் இவ்வாறு செய்ததாக அந்த சிற்றூழியர் தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிஸ் தலைமை...

'ஏசியாவோச்' சுட்டிக்காட்டியுள்ள விடயமாகும்.

'ஏசியாவோச்' சஞ்சிகையின் இக் கணிப்பீடானது, தமிழ் மக்களுக்கு ஆச்சரியம் அளிக்கும் ஒன்றல்ல. வெளிநாட்டுச்சஞ்சிகை ஒன்று எழுதியுள்ளமையே இதில் உள்ள முக்யம். இது உலக மக்களும் சிறிலங்கா அரசாங்கத்தின் கபடநாடகத்தைப் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாகும்.

1983ஆம் ஆண்டு இனப்பிரச்சினை தொடர்பாக ஆயுதப்போராட்டம் வெடித்துக் கிளம்பிய அன்றிலிருந்து இன்று வரை இனப்பிரச்சினையின் தீர்வு குறித்து அரசாங்கம் அனுசிய முறையாவும் நேர்மையற்றவையாகும். பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வகையில் இருக்கவில்லை. இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே இறுதித்தீர்வு எனத் திடமாக எண்ணும் சிறிலங்கா அரசாங்கம் அரசியல் தீர்வு குறித்து ஒரு சரியான அணுகுமுறையைக் கையாளவில்லை.

வட்டமேசை மாநாடு, சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத்தெரிவுக்குழு எனக் காலம் கடத்தும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டிருந்ததே ஒழிய பிரச்சினைத் தீர்விற்கு உருப்படியான தீர்வு எதையும் முன்வைக்கவில்லை. இம் மாநாடுகளிலும், கூட்டங்களிலும் தமிழர் தரப்பு பிரச்சினை எதையும் அவர்கள் கண்டு கொள்ளவுமில்லை.

மேலும், ஒரு பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால், பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசவேண்டும். ஏனெனில், தீர்வு ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைச் சாத்தியமாக வேண்டுமானால், அதனை பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் எழுதப்பட்ட தீர்வானது வெற்றுப் பேப்பருக்கே சமானமாகும். இந்நிலையில் அரசாங்கம் கடந்த காலத்தில் இதுகுறித்து முன்முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை. இதேவேளை சுமார் 14 மாதங்கள் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்திய போதும் அரசாங்கம் பிரச்சினையைத் தீர்க்கக்கூடியதாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

அத்தோடு, இன்றுள்ள ஐ.தே.கட்சி அரசாங்கம் இனப்பிரச்சினையை தீர்க்கக் கூடிய ஆற்றல் கொண்டுள்ளதா என்பதும் சந்தேகமே. சாகும் வரை உண்ணாவிரதமிருந்த போர்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை மூலம் உடன்பாடு கண்டமைக்கு எதிராக இராணுவத்தரப்பில் எழுந்துள்ள எதிர்ப்பு குறித்து அரசாங்கம் அஞ்சுவது போல் தெரிகின்றது. இந்நிலையானது இராணுவத்தின்விருப்பத்தினைப்புறக்கணித்துஇனப்பிரச்சினையைத் தீர்க்கும் ஆற்றல் அரசாங்கத்திடம் இல்லை என்பதைக்காட்டுவதாக உள்ளது. இதன் காரணமாக இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைநடத்தக் கூடிய ஓரளவு நல்ல சூழ்நிலை உருவாகியுள்ள போது அரசாங்கம் அதில் ஆர்வம் காட்டுவதாக இல்லை. இது அரசாங்கத்தின் அக்கறையீனத்தையும் ஆற்றல் இன்மையையுமே காட்டி நிற்கின்றது.

இந்நிலைமை இனப்பிரச்சினையில், அரசாங்கத்தின் தெளிவற்ற நிலைப்பாட்டையும் கையாலாகாத்தனத்தையும் வெளிக்காட்டுபவையாகவே உள்ளன. ஆனால், இவற்றை அரசாங்கம் மறைக்க எடுக்கும்பெரு முயற்சிகள் தோல்விகாணத் தொடங்கிவிட்டன. இதனை 'ஏசியாவோச்'கண்டுகொண்டு விட்டது போல், உலகமும் கண்டு கொள்ள வேண்டும்.

# விசாரணைக்கமிசன் தேவை

## எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல அரசுக்கு எதிராகச் சாட்டிய குற்றங்கள் சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளும்படி கேட்பது குறித்து ஆலோசிக்க எதிர்க்கட்சிகள் விரைவில் கூடவுள்ளன.

உடுகம்பொல தெரிவித்த குற்றங்கள் பற்றி விசாரிக்க ஒரு ஆணைக் குழுவை நியமிக்கும்படி கோரவுள்ளதாக எதிர்க்கட்சிகள் தரப்பில் கூறப்படுகிறது.

உடுகம்பொல கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட பிறகு, காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராகப் பல குற்றங்களைச் சுமத்தியது தெரிந்ததே.

அப்போது எதிர்க்கட்சிகள் சுயேட்சையான ஓர் ஆணைக் குழுவை நியமிக்கும்படி கோரியிருந்தன. உடுகம்பொல தலைமறைவாகியதும் இந்தக் கோரிக்கை கைவிடப்பட்டது.

உடுகம்பொலவைக் கைது செய்யும்படி குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குப் பணிக்கப்பட்டது. இந்தப் பணிப்புரையை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நிறைவேற்ற முடியவில்லை. தலைமறைவு வாழ்க்கை நடத்திவந்த உடுகம்பொல கொழும்பில் 'இரகசி இல்லம்' ஒன்றில் இருந்தபடி பத்திரிகைகளுக்குப் பேட்டிகளும், செய்தி அறிக்கைகளும் கொடுத்திருந்தார்.

இந்தியாவிலிருந்து உடுகம்பொல நாடு திரும்பியதும் எதிர்க்கட்சிகளின்ஆணைக்குழு பற்றிய கோரிக்கை வலுவடைந்துள்ளது.

சிலதினங்களுக்கு முன் நாடு திரும்பிய உடுகம்பொல நீதிமன்றத்தில் ஆஜராகிப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டமை தெரிந்ததே

## கொழும்பு தனியார் மருத்துவமனையில்

# சிகிச்சை பெற்றுவந்தவர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(கொழும்பு)

கொம்பனித்தெருவில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றினுள் கடந்த 24ஆம் திகதி காலை புகுந்த துப்பாக்கி ஏந்திய நபர்கள் மூவர் அங்கு சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்து விட்டு தப்பி ஓடியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான செல்லத்துரை என்ற நோயாளி அங்கிருந்து வெளியேறி ஆட்டோ ஒன்றில் தப்பியோட முயன்றபோது துப்பாக்கி நபர்கள் அவரை துரத்திச் சுட்டதில் ஆட்டோ சாரதியும் காயமடைந்தார்.

இருவரும் ஆபத்தான நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெமட்டகொடையில் கடந்தவாரம் இடம்பெற்ற கோஷ்டி சண்டையில் காயமடைந்த நபரே கொம்பனித்தெரு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தபோது தாக்கப்பட்டவர் என கொம்பனித்தெரு பொலிசார் தெரிவித்தனர்.

# தமிழர் வீடுகளில் இராணுவம் முகாம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொம்மாதுறைக் கிராமத்தைச் சேர்ந்த 26 குடும்பங்கள் தமது வீடுகளில் பாதுகாப்பு படையினர் முகாமிட்டிருப்பதால் அகதிமுகாம்களிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் 1990 ஜுலை முதல் வசித்து வருகிறார்கள்.

அத்தோடு கடந்த மூன்று வருடங்களாக தமது இல்லங்களுக்கு எந்தவித வாடகையும் தரப்படவில்லையென்றும் மேற்படி குடும்பங்கள் அரசாங்க அதிபருக்கு புகார் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயத்தை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தும் இன்னும் ஆவன செய்யப்படவில்லையென்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# தெரிவுக்குழு நடவடிக்கை ஓர் ஏமாற்று நடவடிக்கை

## நவசமசமாஜக்கட்சி

[கொழும்பு]

பாராளுமன்றத் தெரிவுக்குழு கலந்துரையாடல் நடத்தி அதன்மூலம் தேசிய இணக்கப்பாட்டினை எட்டலாம் என்பது முற்றிலும் பொருந்தாது என்பதுடன் ஓர் ஏமாற்றும் நடவடிக்கையும் ஆகும் என்று நவசமசமாஜக் கட்சி கூறியுள்ளது.

இந்து பத்திரிகைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அளித்த பேட்டியில், தமிழ்த்தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகஎழுப்பப்பட்ட கேள்விக்கு பாராளுமன்ற தெரிவுக்குழு பற்றி அவர் அளித்த பதிலை சுட்டிக்காட்டி அதனை அம்பலப்படுத்தும் வகையில் வெளியிட்ட அறிக்கையில் மேலும்-

கடந்த பதினேழு ஆண்டுகளாக தொடர்ந்து பதவியில் இருக்கும் ஐ. தே. க. அரசு வட்டமேசை மாநாடு, சர்வகட்சி மாநாடு, பாராளுமன்ற தெரிவுக்குழு இதுபோன்ற சற்றும் உபயோகமற்ற வெறுப்புணர்ச்சி ஏற்படுத்தக் கூடிய இழுத்தடிப்பு நடவடிக்கைகளையே மேற்கொண்டு வந்துள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

## கஷ்டப்பிரதேசத்திற்கு

# ஆசிரியர்களை இடமாற்ற திணைக்களம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு வெளியே இதுவரை கடமையாற்றாத ஆசிரியர்களின் ஒரு தொகுதியினர் யாழ் கல்வித் திணைக்களத்தினால் கஷ்டப் பிரதேசங்களுக்கு அடுத்த மாதம் 1ஆம் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நகர்ப்புறத்தில் இருந்து பருத்தித்துறை கிழக்கிற்கு 26பேரும், ஏனைய ஐந்து கோட்டங்களில் இருந்து கெற்பலிக்கு 30 பேரும், நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு 16 பேரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என யாழ். கல்வித் திணைக்களவட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. [பா] [17]

### அமைதிச்

முதலில் சந்தேகம் இருந்தது எனினும் முன்னேற்றத் திட்டங்கள் குறித்து நாம் எடுத்துக் கூறியே உதவியை பெறக் கூடியதாக இருந்தது என்றும் பிரதமர் ரணில் மேலும் தெரிவித்தார்.

### பலவந்தை

இவ்வாறு முகாமில் இருந்து கொண்டு செல்லப்பட்டவர்கள் முகாமில் நடைபெற்ற உண்ணாவிரதத்தை முன்னின்று நடத்தியமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் சிறைக்கைதிகளின் நலன் தொடர்பாக பல முறை தடுப்புமுகாம் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஷெல்லை

பெற்ற இடத்தில் இருந்த கொட்டில் முற்றாக இருந்த இடம் தெரியாமல் சேதமடைந்து குழியொன்றையே காணக் கூடியதாக உள்ளது. மரணமடைந்தவரின் உடலின்பாகங்கள் நாலாபுறமும் தூக்கி வீசப்பட்டுக் கிடந்தன. ஓடக் கூடிய நிலையில் இருந்த சைக்கிள் ஒன்றும் பகுதி பகுதியாக சேதமடைந்த நிலையில் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. மேலும் அவ்விடத்தில் நின்ற தென்னை மரங்களில் தசைத் துண்டுகளும் இரத்தக்கறைகளும் படிந்த நிலையில் சேதமடைந்து காணப்பட்டன.

(பா), (நி), (11), [09]

னுவத்திடம் கையளிக்காவிட்டால் நேரடி நடவடிக்கை மேற்கொள்ளும் பாதையை தேர்ந்தெடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் தங்களுக்கு ஏற்படுமென்றும் அத்தகைய சூழ்நிலை ஏற்படும் இடத்து சிறிலங்கா அரசே பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்றும் சிறிலங்கா பிரதமரை அந்த மகஜரில் ராஜீவ் காந்தி படையணியினர் எச்சரித்திருப்பதாகவும் பி. ரி. ஐ செய்தி கூறுகிறது.

# புலனாய்வுதிணைக்களத்தில் பத்திரங்கள் திருட முயற்சி

(கொழும்பு)

பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் இருந்து குற்ற விசாரணைப் பதிவுப் புத்தகங்களையும் மற்றும் போட்டோ பிரதித் தாள்களையும் களவாடிச்செல்ல முயற்சித்த சிற்றூழியர் ஒருவர் கையும்மெய்யுமாகப் பிடிபட்டார்.

குற்றப்புலன் விசாரணையில் ஈடுபடும் பொலிசாரும் இரகசியப் பொலிசாரும் [சி.ஐ.டி] பயன்படுத்தும் மேற்படி பதிவுத்தாள்களை புறக்கோட்டை பொலிசில் பணியாற்றும் சார்ஜன்ட் ஒருவர் களவாடித்தருமாறு கேட்டதையடுத்தே தான் இவ்வாறு செய்ததாக அந்த சிற்றூழியர் தெரிவித்துள்ளார்.

மேலும் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தின் பதிவேட்டு அறையில் இருந்தே இச்சிற்றூழியர் மேற்படி பொருள்களைத் திருடியதாகத் தெரிய வருகின்றது.

இத்திருட்டு முயற்சிக்கு உடந்தையாக இருந்ததாகச் சந்தேகிக்கப்படும் பதிவேட்டு அறை ஊழியரான பெரேரா என்பவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

### பெற்றோல்

சிறிலங்கா அரசிற்கும்இடையே ஏற்பட்ட உடன்படிக்கையை அடுத்து சில பொருள்கள் மீதான தடை நீக்கப்பட்டதும் தெரிந்ததே.

வடபகுதி மீதான பொருளாதார தடை நீக்கம் குறித்து சிறிலங்கா அரசு வர்த்தமானி மூலம் அறிவித்துள்ள இவ்வேளையில் தடை நீக்கப்பட்ட பொருள்களில் சிலவற்றை எடுத்து வந்த சில பொது மக்களை தாண்டிக்குளம் தடை முகாமில் சோதனையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் தாக்கியுள்ளனர். அத்துடன் அவர்கள் எடுத்து வந்த பெற்றோல், டீசல் ஆகியவற்றை பறிமுதல் செய்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யன்று இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்பட்ட இருவர் காயங்கள் எதுவும் இன்றி மீண்டும் வந்துள்ளார் என்று தெரிய வந்துள்ளது. ஓமந்தை நாவற்குளத்தைச் சேர்ந்த வள்ளி என்னும் நடுத்தர வயதுடைய குடும்பப் பெண்மணி ஒருவரும், மாமடு குளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் உதயகுமார் [21வயது) என்பவருமேஇவ்வாறு மீண்டு வந்தவர்கள் ஆவர்.

### விளையாட்டு

மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் புதன்கிழமை (30 - 06 - 93) பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும். இப்போட்டிகளுக்குப் பிரதம விருந்தினராக மருதனார்மடம் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை ஆரம்பப்பிரிவு மாணவர்களுக் கிடையேயான விளையாட்டுப் போட்டிகளின் இறுதித் தெரிவு ஜுலை மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளன.

### கொடுப்பனவு

னால் பாடரீதியான பிரதம மேற்பார்வையாளர்கள் அவ்வக் கல்விக் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களிடம் கொடுப்பனவுப் பட்டியலையும் பணத்தையும் பெற்று உரியவர்களுக்கு வழங்கி பின் கொடுப்பனவுப் பட்டியலை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னதாக தமிழீழக் கல்விக் கழக பணிமனையில் ஒப்படைக்கும்படி தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

பருத்தித்துறை நகராட்சிமன்றம்

## நகராட்சிமன்றக் காணியை நிலமற்றோருக்கு நிலவாடகை அடிப்படையில் பகிர்ந்தளித்தல்

இந்நகராட்சிமன்ற நிர்வாக எல்லைக்குள் மூன்றாம் குறுக்குத் தெருவிலும், இரண்டாம் குறுக்குத் தெருவுக்கும், மூன்றாம் குறுக்குத் தெருவுக்கும் இடையிலுமுள்ள இந்நகராட்சிமன்றத்திற்குச் சொந்தமான காணி ஏற்கனவே 48 துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு நிலமற்ற பொதுமக்களுக்கு நிலவாடகை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எனினும் 23 துண்டுகளுக்கு உரியவர்கள் தவிர ஏனையோர் நீண்ட காலமாக இக்காணிகளில் குடியிருக்காதிருப்பதனால் இந்நிலங்கள் தரிசு நிலங்களாக விடுபட்டிருப்பதோடு, பொதுமக்கள் பாவனைக்கு உதவாதவையாகவும் மாறி வருகின்றன. அதே சமயம் நிலமற்ற மக்கள் தரிசாகக் கிடக்கும் காணித் துண்டுகளைத் தமக்குப் பகிர்ந்தளிக்குமாறு விடுக்கும் கோரிக்கையையும் யான் பரிசீலனை செய்யமுடியாதுள்ளது. எனவே இக்காணித் துண்டுகளை முன்பு நகராட்சி மன்றத்திடமிருந்து பெற்றுக்கொண்டவர்கள் அவை தொடர்பான ஆவணங்களுடன் 31-07-1993ஆம் திகதிக்கு முன்பு இவ்வலுவலகத்துக்குச் சமுகமளித்து என்னுடன் தொடர்பு கொண்டு தமது உரிமையை நிலைநாட்டிக்கொள்வதோடு, தரிசாகக் கிடக்கும் காணித் துண்டுகளில் மீளவும் குடியேறி அவற்றை உரியமுறைப்படி பேணுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேற்காட்டிய கால எல்லைக்குள் தமது உரிமையை உரியமுறைப்படி நிலைநாட்டி ஏற்ற நடவடிக்கை எடுக்கத் தவறுவோர் இக்காணித் துண்டுகளில் தமக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும் என்பதோடு, இவை நிலமற்ற மக்களுக்கு நிலவாடகை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும் என்பதையும் இத்தால் சகலருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நகராட்சிமன்ற அலுவலம்,
பருத்தித்துறை,
24-06-1993

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

(சி-6906)

## முதலாவது பிறந்த தினம்

28-06-93

### செல்வி தெ. தெய்வீகா

புலோலி கிழக்கு வராத்துப்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. திருமதி தெய்வேந்திரராசா (அம்பாள் ஸ்ரோர்ஸ் — பருத்தித்துறை) கலாதேவி தம்பதிகளின் புதல்வி தெய்வீகா முதலாவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகின்றார்.

தெய்வீகா, ஸ்ரீ வல்லிபுரநாதனின் நல்லருள் பெற்று நீடூழி வாழ அப்பா, அம்மா, அப்பம்மாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், பெரிய மாமாமார், மாமிமார் குடும்பம், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார் ஆகியோருடன், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

(சி-6908)

## 5-வது பிறந்த தினம்

[28-06-93]

### செல்வன் செல்வ சுஜீபன்

கரவெட்டி மேற்கு 'ரஜனி இல்லத்'தைச் சேர்ந்தவரும், பிரான்ஸில் வசிப்பவர்களுமாகிய திரு. கந்தப்பு செல்வகுமார்- திருமதி ரஜனி தம்பதிகளின் ஏக புதல்வன் செல்வ சுஜீபன் 5-வதுபிறந்த தினத்தை இன்று பிரான்ஸில் கொண்டாடுகிறார்கள்.

செல்வ சுஜீபன், கரவெட்டி, சகாதேவன் குடியிருப்பு ஞான வைரவர் அருள் பெற்று நீடூழி வாழ அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பாட்டி, ரஜனிகாந் மாமா, நளினிச் சித்தி, சவுதி மாமாமார் பிரான்ஸ் மாமாமாருடன் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

(சி/6907)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 27-6-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10088


வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-6983, 42-9326, 42-6157, 41-4719, 28-1085, 24-1250, 42-3329, 27-5823, 42-3993, 28-3476, 24-7225, 26-5760, 41-9989, 26-2745, 24-8631, 28-1799, 42-3419, 26-9611, 26-4885, 24-5119, 42-2364, 27-9719, 24-0416, 24-4992, 24-2359, 43-2666.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-5679, 26-7068, 26-1989, 41-9659, 26-7252, 27-9365, 22-0267, 41-9895, 26-0763, 27-7740, 26-4792, 26-4436, 26-4610, 27-2056, 24-4481, 43-4170.

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு
05 — 04 — 1970

வீரச்சாவு
28 — 06 — 1992

### கப்டன் வீரமணி

(கணேசபிள்ளை சந்திரசேகரம்)

தேய்ந்து மறைந்திட்ட
காலம் ஒரு வருடம் ஆனால்
ஓய்ந்து விடவில்லை
உன் நினைவலைகள் ஒரு போதும்
மக்கள் மனங்களைக் கவர்ந்து இழுக்கும்
உன் விழிகளின் காந்தம்
சூழ இருப்பவரைச் சிரிக்க வைக்கும்
உன் விகடப் பேச்சு
எந்த வேளையும் மலர்ந்தேயிருக்கும்
உன் இதழ்களின் சிரிப்பு
போர்க்களங்களில் முன்னின்று சமரிடும்
உன் இணையற்ற வீரம்
எதை மறப்பது உன்னை
எப்படி மறப்பது
எம் மனங்களில் நிறைந்து நிற்கும்
மாவீரனே!
உனக்கு எம் வீரவணக்கங்கள்.

—நண்பர்கள்

(5234)

## இருமுறை பயணம்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'குமண' கப்பலில் நோயாளிகள் உட்பட மொத்தம் 216 பேர் இரண்டு தடவையில் செல்லவுள்ளனர்.

இன்று பிற்பகல் 4 மணிக்கு திருக்கோணமலைக்குப் புறப்படவுள்ள இக்கப்பலில் 103 பேர் புறப்படுவர். இக்கப்பல் 30ஆம் திகதி காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து அன்று மாலை நோயாளிகள் உட்பட 113 பேருடன் உடனேயே திரும்பிச் செல்லும்.

(யோ)

## தமிழ் விவசாயி கடத்தல்

(மட்டக்களப்பு)

வீரமுனை கிராமத்தைச் சேர்ந்த விவசாயியான கிருஷ்ணபிள்ளை (58வயது) கடந்த வாரம் ஞாயிறு இரவு பிக்அப்பில் வந்த சீருடை தரித்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். வாகனத்தில் வந்தவர்கள் பொலிஸ் பாணியிலான சீருடை அணிந்திருந்தனர்.

இப்பகுதியில் அதிரடிப் படையினரின் முகாம் ஒன்றும் உள்ளது. சம்பவமும் முகாமிற்கு அண்மையாகவே நடந்துள்ளமையினால் மீளக் குடியேறிய வீரமுனை தமிழ் விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

## 6-ம் மாத அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவில்லும்

### இராமச்சந்திரன் சுரேஸ்

[துர்க்கா பாமசி உரிமையாளர், புதுக்குடியிருப்பு]

அன்னையின் மடியில்:

அசுரர்கள் பிடியில்:
(இளாலிக்கடலில்)

## ஓராண்டு நினைவஞ்சலி



லெப்டினன்ட்
### வீரமணி

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா பாலசுப்பிரமணியம்

[சுப்பையா அன்சன்ஸ் உரிமையாளர்]

# 6-ம் மாத அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவில்லும்

## இராமச்சந்திரன் சுரேஸ்

[துர்க்கா பாமசி உரிமையாளர், புதுக்குடியிருப்பு]

அன்னையின் மடியில்:
**1968-09-29**

அசுரர்கள் பிடியில்:
(கிளாலிக்கடலில்)
**1993-01-02**

சிரித்துச் சிரித்துச் கதைகள் பல பேசி
கேட்போரையும் சிரிக்க வைத்து
அனைவரையும் கவர்ந்து
தூங்காத இரவுகளை துன்பத்திற்கு தந்துவிட்டு
துயில் கொள்ளக் கடல் கடந்து சென்றீரே
அன்புச் செல்வத்தையும் அருமைத் துணைவியாரையும்
அரவணைத்திட்ட ஆலவிருட்சமே உங்கள்
மறைவுச் செய்தி கேட்டு 180 நாட்கள் ஆகியும்
எமதுள்ளம் ஏற்குதில்லையே என் தெய்வமே
சோலைவனமாய் இருந்த என் வாழ்வு பாலைவனமானதே
என் வாழ்வில் இனி ஒளியில்லை
இருள் தான் குடியிருக்கும் — நீங்கள்
எங்கிருந்தாலும் அமர வாழ்வு வாழ்வீர் என்பது உறுதி.

அன்று கிளாலிக் கடலில் என் கணவருக்கு என்ன நடந்ததோ என்று ஏங்கிக்கொண்டிருந்த போது தங்கள் பொறுப்புக்களை ஒரு புறம் தூக்கிப் போட்டுவிட்டு ஓடோடி வந்து அவரின் அகால மரணம் பற்றி தகவல் தந்துதவி ஆறுதல் வார்த்தைகளை தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் எனது கணவனுடைய பொன்னுடலை கண்டெடுத்து எங்களிடம் அனுப்பி வைக்க முடியாத நிலையில் அவரின் இறுதிக் கிரியையை செவ்வனே செய்து முடித்த க. இராஜேந்திரன் (நாதன் பாமசி உரிமையாளர், கல்வியங்காடு) அவர்கட்கும் மற்றும் தகவல்கள் பெற்றுத்தந்த அகில உலக செயர் நிறுவனத்தினருக்கும், காவல்துறையினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 28-06-93 அன்று அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும், அஞ்சலியிலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் வாடும்
மனைவி, மகன், தாய், தந்தை, சகோதரர்கள்.

### 6ஆம் மாத நினைவலைகள்

எங்கிருந்தோ வந்தாய் எங்களுடன் இணைந்தாய்
புதுப்பொலிவுடன் புதுக்குடியிருப்பிலிருந்து புதுப்புது மருந்துகளை
கொண்டு வந்து தந்தாய் எங்கள் அன்பு நண்பனே சுரேஸ்
இன்று நீ எங்கு சென்றாய்.
அன்று உனது கையிலே நகம் வளர்த்தாய்
எதற்கு என்று நான் காரணம் கேட்டேன்
அடையாளத்திற்கு என்று சொன்னாய்
இன்று அதனையே அடையாளம் காட்ட வைத்தாயே
வானத்து நிலவென வளர்ந்திட்ட எங்கள் நண்பனே
வாரி அணைத்த எங்கள் இதயம் துடிக்குதடா
நாங்கள் அழுத கண்ணீர் வற்றாதடா.

உன் பிரிவால் வாடும்
நாதன் அண்ணாவும், ஊழியர்களும்
உரிமையாளர்: நாதன் மருந்தகம்
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

சாந்தமான உன் முகமும்
சாதுவான உன் பேச்சும்
எம் மனதை விட்டு ஒருபோதும் அகலாது.
சிற்றி மெடிக்கல்ஸ், யாழ்ப்பாணம்.

நீ பிரிந்தாலும் எம்
மனதை விட்டு உன்
நினைவுகள் பிரியாது.
ரட்ணம் பாமசி, யாழ்ப்பாணம்.

[5175]

---

காலம் ஒரு வருடம் ஆனால்
ஓய்ந்து விடவில்லை
உன் நினைவலைகள் ஒரு போதும்
மக்கள் மனங்களைக் கவர்ந்து இழுக்கும்
உன் விழிகளின் காந்தம்
சூழ இருப்பவரைச் சிரிக்க வைக்கும்
உன் விகடப் பேச்சு
எந்த வேளையும் மலர்ந்தேயிருக்கும்
உன் இதழ்களின் சிரிப்பு
போர்க்களங்களில் முன்னின்று சமரிடும்
உன் இணையற்ற வீரம்
எதை மறப்பது உன்னை
எப்படி மறப்பது
எம் மனங்களில் நிறைந்து நிற்கும்
மாவீரனே!
உனக்கு எம் வீரவணக்கங்கள்.
(5234)
—நண்பர்கள்

## நினைவஞ்சலி



லெப்டினன்ட்
**வீரமணி**
**தீபன்ராஜ்**
(குணரத்தினம் ஸ்ரீரஞ்சன்)

தமிழ்த்தாய்மடியில்:
07-09-1975

வீரமண்ணின் முனையில்:
28-06-1992

திதி: 28-06-1993

மெச்சிடும் வேங்கை
மறவன் ஆகி
மேதகு மண்ணின்
மா வீரனுமாய்
லெப். வீரமணி,
தீபன்ராஜ் மாய் நீ
அளித்த கொடைகள்
இதயங்கள் மறக்குமோ?

இவருடன் அன்றைய தினம் வீரச்சாவு எய்திய சக மாவீரர்கள் அனைவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம். 28-06-93 (திங்கட்கிழமை) இன்று நடைபெறவிருக்கும் முதலாம்ஆண்டு திவசக்கிரியைகளில் சகபோராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டிப்பிரார்த்திக்க அழைக்கின்றோம்.

உன்பிரிவால் ஏங்கித்தவிக்கும்;
அப்பா, அம்மா,
தம்பிமார், தங்கைமார்.

பன்றித்தலைச்சி
அம்மன் கோயிலடி,
மட்டுவில் வடக்கு.
(5236)

---

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா பாலசுப்பிரமணியம்

[சுப்பையா அன்சன்ஸ் உரிமையாளர்]

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச்சேர்ந்த சுப்பையா அன்சன்ஸ் உரிமையாளர் திரு சுப்பையா பாலசுப்பிரமணியம் கொழும்பில் காலமானார். இவர் கமலாதேவியின் அன்புக் கணவரும், பவானி, சியாமளா, பகீரதன் இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம்), வரதராஜன், வரதலட்சுமி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தில்லைநேசன், இராஜநவநாதன், கலைமகள், துஷியந்தி, பாலச்சந்திரன் ஆகியோரின் பிரியமுள்ள மாமனாரும், தேசிகநாதனின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [27-6-93] நேற்று கொழும்பில் நடைபெற்றன,

தகவல் :
மகன் : பா. பகீரதன்

'துவாரகா'
பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

[சி-6909]

## சின்னத்துரை சௌபாக்கியம்

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் லீலா இல்லம், 62, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பில் வசித்தவருமாகிய சின்னத்துரை சௌபாக்கியம் காலமானார். இவர் லீலா கலண்டர் ஸ்தாபகரும், லீலா ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய காலஞ்சென்ற ச. த. சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலேந்திரா (சட்டத்தரணி), மற்றும் சுந்தரலிங்கம் (சட்டத்தரணி), சோமசேகரம் [வைத்தியர் லண்டன்], அருளானந்தம் (ராம்ஸ் சன்ஸ்], தேசபந்து (லீலா இன்ஜினியரிங் வேக்ஸ்) லோகநாதன் [லீலா அச்சகம்], தனபாலா (டினோஷன் ரேடிங் கொம்பனி), சொக்கநாதன் (பொறியியலாளர் அமெரிக்கா). ரவீந்திரா [சங்கரன் அன் கொம்பனி] ஆகியோரின் அன்புத் தாயாரும், திசைவீரசிங்கம், முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (28-06-93] திங்கள் பி.ப. 4 00 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
திருமதி முத்தம்மா நாகலிங்கம்
(சகோதரி)

கிறேஸ்லின்,
உடுவில்.

(5235)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.